**OS No.61/2019**

DW 1 - முருகன்

நாள் 15.09.2025

**பி.வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை 31 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

இந்த வழக்கு சொத்துக்கள் போக இன்னும் சில சொத்துக்கள் எனக்கு பூர்வீக சொத்துக்களாக இருந்தன என்றால் சரிதான். எனக்கு பாத்தியமான சொத்துக்களை என் தகப்பனார் இருக்கும் போதே பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். அப்படி பாகம் பிரித்த சமயத்தில் 31 ம் பிரதிவாதி இன்டஸ் டவர் அமைத்துளள இடமானது என் பாகத்திற்கு கிடைக்கப்பெற்ற சொத்து என்றால் சரிதான்.

அதன் அடிப்படையில் 31 ம் பிரதிவாதி இன்டஸ் டவர் அமைப்பதற்கு 2019 ம் வருடம் பதிவு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் எழுதிக்கொடுத்துள்ள பதிவு ஆவணத்தின் அடிப்படையில் இன்று வரையில் அந்த இடத்தில் இன்டஸ் டவர் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

அந்த இன்டஸ் டவருக்கான வாடகையை மாத மாதம் நான் தான் வாங்கி வருகிறேன் என்றால் சரிதான். இன்டஸ் டவர் அந்த இடத்தில் ஏற்பட்ட போது மாத மாத வாடகை நான் வாங்கி வரும் விபரம் வாதிக்குத் தெரியும் அவர் எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

31 ம் பிரதிவாதி ஏற்படுத்தியுள்ள இன்டஸ் டவருக்கும் வாதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான்.

**<u>குறுக்கு விசாரணை வாதிகள் தரப்பில்</u>**

என் தகப்பனாருடன் உடன் பிறந்தவர்கள் ஆறு பேர் முறையே 1.கந்தசாமி, 2. சண்முகம், 3.ராமையா, 4. கிருஷ்ணன், 5.குழந்தைவேலு ( என்

தகப்பனார் ) மற்றும் 6. பாண்டி ஆவார்கள். அவர்கள் தகப்பனார் பெயர் காத்தாரு அம்பலம். என் தகப்பனாருடன் பிறந்தவர்களில் ராமையா மட்டும் உயிருடன் உள்ளார் மற்றவர்கள் இறந்துவிட்டனர்.

கந்தசாமி என் பெரியப்பா அவரது மகன் தான் சீனிவாசன் அவர் தான் இந்த வழக்கை போட்டுள்ளார். சீனிவாசன் உடன் பிறந்தவர் பெயர் பாலசுப்பிரமணியன் அவர் தற்போது உயிருடன் இல்லை. அவரது வாரிசுகள் தான் இந்த வழக்கின் 1 முதல் 4 பிரதிவாதிகள் ஆவார்கள். சீனிவாசன் உடன் பிறந்தவர்கள் வள்ளி, லெட்சுமி அவர்கள் 5,6 பிரதிவாதிகளாக இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

சண்முகத்தின் வாரிசுகள் இந்த வழக்கில் 7 முதல் 9 பிரதிவாதிகளாக இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். என் பெரியப்பா ராமையா இந்த வழக்கில் 10 ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார். கிருஷ்ணனின் வாரிசுகள் தான் 11 முதல் 17 பிரதிவாதிகளாக இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். ( 12 ம் பிரதிவாதி திருப்பதி இறந்துவிட்டார் ). அவர் திருமோகூர் என்ற ஊரில் வசித்து வந்தார்.

திருப்பதி இறந்துவிட்ட விபரத்தை நான் நீதிமன்றத்தில் சொல்லவில்லை. என் தந்தை குழந்தைவேலின் வாரிசுகளாக இவ்வழக்கில் 18 முதல் 22 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். என் சிறிய தகப்பனார் பாண்டி அவர்களின் வாரிசுகளை 23 முதல் 28 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

29, 30 மற்றும் 31 ம் பிரதிவாதிகள் எங்கள் குடும்பத்திற்கு சம்பந்தப்பட்டவர்கள் இல்லை என்றால் சரிதான். சீனிவாசன் என் அண்ணன் முறை வேண்டும். அவர் 4 இடத்திற்கு வழக்கு போட்டுள்ளார். அவர் தாக்கல் செய்துள்ள சொத்துக்கள் அனைத்தும் காட்டாருஅம்பலம் வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவரது மனைவி பெயர் பொன்னம்மால் ஆகும்.

இந்த வழக்கு சொத்துக்களில் காட்டாருஅம்பலம் உடன் பிறந்த ஆறுமுகம் சேர்வை வாரிசுகளுக்கும் பங்கு உள்ளது, சொத்துக்கள் கூட்டுப்பட்டாவாக இருக்கின்றது. கூட்டுப்பட்டாவின் சொத்துக்கள் பாகம்பிரிக்கப்பட்டுவிட்டது. அதனால் ஆறுமுகம் சேர்வை வாரிசுகளுக்கு வழக்கு சொத்தில் பாக உரிமை கிடையாது.

இந்த வழக்கு சொத்துக்கள் காட்டாருஅம்பலம் வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டது ஆகும். தாவா 4 ம் இலக்கச் சொத்து என் அப்பத்தா பொன்னம்மாலுக்கு சீதனமாக கொடுத்த சொத்து ஆகும். ஆரம்ப காலத்தில் மேற்படி பொன்னம்மாள் பெயரில் பட்டா ஏற்பட்டு இருந்தது. பின்னர் என் தகப்பனார் பெயரில் பட்டா ஏற்பட்டது. அதே போல் என் தகப்பனார் உடன் பிறந்த அனைத்து சகோதரர்களுக்கும் பாகபிரிவினை அடிப்படையில் தனித்தனி பட்டா ஏற்பட்டது.

என் தகப்பனார் பெயரில் 115 வது நம்பர் பட்டா ஏற்பட்டிருந்தது. அந்த பட்டாவின் கணினி நகல் தான் என்னிடம் காட்டப்படும் நகல் ஆகும். அது **வா.சா.சா.ஆ 11 ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது**. எங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட பாகத்தின் அடிப்படையில் என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட அனைத்து சொத்துக்களும் இந்த பட்டாவில் சேர்ந்துவிட்டது என்றால் சரியல்ல.

பட்டாவில் கண்ட சொத்துக்கள் அனைத்தும் நஞ்சை நிலம் ஆகும். இது போல் என் தகப்பனார் உடன் பிறந்தவர்கள் பெயர்களிலும் பட்டா ஏற்பட்டது. பெரியப்பா பெயரில் உள்ள சொத்துக்கள் எங்கள் பெயரிலும் எங்கள் பெயரில் உள்ள சொத்துக்கள் பெரியப்பா பெயரிலும் உள்ளன. அது போல் மாறி மாறி உள்ளது.

இப்படி மாறி உள்ள சொத்துக்களின் சர்வே எண் 254 ஆகும். மற்ற சொத்துக்களின் சர்வே எண் தற்போது நினைவில்லை. சர்வே எண் 254 சொத்து ( 15 சென்ட் ) கந்தசாமி பெயரில் உள்ளது. என்னிடம்

காட்டப்படும் பட்டா எண் 90 கந்தசாமிக்கு உரிய கணினி பட்டாவாகும். அது **வா.சா.ஆ 12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட நஞ்சை நிலங்களைப் பொறுத்து ஏற்கனவே இருந்த பாகத்தின் அடிப்படையில் அவர் அவர்களுக்கு கிடைத்த சொத்துக்கள் தனித்தனியாக பட்டா ஏற்பட்டுவிட்டது நான் சொல்வது போல் சொத்துக்கள் மாறி மாறி இல்லை என்றால் சரியல்ல.

சொத்துக்கள் மாறி மாறி ஒதுக்கப்பட்டதற்கு ஆவணங்கள் கிடையாது என்றால் சரிதான். பொன்னம்மாள் பெயரில் ஏற்பட்ட சொத்து என் தகப்பனார் பெயருக்கு மாற்றப்பட்டதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தாவா 4 வது இலக்க சொத்தான 87/2 ல் என் தகப்பானருடன் பிறந்த 6 பேருக்கும் பங்கு உள்ளது.

நிலத்தின் அமைப்பை பொறுத்து வடக்கு – தெற்காகவும், கிழக்கு – மேற்காகவும் பிரித்துக்கொள்வோம். 31 ம் பிரதிவாதிக்கு முதல்முதலாக 2008 ம் ஆண்டு டவர் அமைப்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டது. அந்த காலகட்டங்களில் என் தகப்பனார் உயிருடன் இருந்தார். 2008 ம் ஆண்டு ஒப்பந்தம் என் கைவசம் உள்ளது.

அந்த ஒப்பந்தத்தை பார்த்தால் இந்த சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்பது தெரியவரும் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தில் என் தகப்பாருடன் பிறந்த சகோதரர்களான சண்முகம், ராமையா, கிருஷ்ணன், பாண்டி மற்றும் கந்தசாமியின் மகனான வாதி சீனிவாசன் ஆகியோர்களை குறிப்பிட்டுத்தான் மேற்படி ஒப்பந்தம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

அந்த ஒப்பந்தத்தில் அடிப்படையில் எழுதப்பட்ட சொத்தில் 6 பேருக்கும் பங்கு உள்ளது என்றும் என் பெயருக்கு உள்ளதை நான் டவருக்கு எழுதிக்கொடுத்துள்ளேன். டவருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட சொத்தின் அளவு 5 செண்ட் ஆகும். டவர் உள்ள சர்வே எண் சொத்தில்

தென்புறத்தில் டவர் அமைக்கப்பட்டுள்ளது. வடபுறம் பகுதி என் தகப்பனாருடன் பிறந்த மற்ற சகோதரர்களுக்கு பாத்தியப்பட்டது. இந்த விபரத்தை நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2008 ம் ஆண்டு டவர் ஏற்படும்போது வாதி சீனிவாசன் தாவா கிராமத்தில் தான் இருந்தார். டவர் ஏற்பட்ட காலத்தில் முன்பணத்தில் யாருக்கும் பங்கு கொடுக்கப்படவில்லை . டவர் அமைந்துள்ள சொத்தில் எனக்கு தனிப்பட்ட பாத்தியம் கிடையாது என்றும் வாதி மற்றும் என் தகப்பனாருடன் பிறந்த இதர சகோதரர்களுக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

தாவா 1 ம் இலக்க சொத்தில் 5 செண்டில் டவர் அமைக்கப்பட்டுள்ளது என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த சொத்து கூட்டுப்பட்டாவாக இருந்து வருகிறது என்றால் சரிதான். என் தகப்பனாருடன் பிறந்த ஆறு பேருக்கும் பங்கு உண்டு என்பதால் தான் கூட்டுப்பட்டாவாக இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

வழக்கு போடப்பட்ட சொத்தில் என் சித்தப்பாவிற்கு ( பாண்டி ) தனியாக சொத்து ஒதுக்கப்பட்டுள்ளதா என்றால் ஒதுக்கப்பட்டுள்ளது அதன் சர்வே எண் எனக்குத் தெரியாது. அந்த நிலம் கருணாபுஞ்சை என்று சொல்வார்கள். அதன் விஸ்தீரணம் எனக்குத் தெரியாது. வழக்கு சொத்துக்களைப் பொறுத்து பாண்டிக்கு தனித்து பாகம் பிரித்துக்கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

பொன்னம்மாள் மற்றும் டவர் அமைக்கப்பட்ட சொத்து தவிர இதர மூன்று சொத்துக்கள் உள்ளன இந்த சொத்துக்களை பொறுத்து இன்றும் கூட்டுப்பட்டாவாக உள்ளது அந்த சொத்துக்களில் ஆறு பேருக்கும் பங்கு உள்ளது. தனித்தனியாக பிரிக்கப்பட்டுள்ளது. வழக்கு சொத்து காட்டாரு அம்பலம் வகையறாவை பொறுத்து பொதுவாக உள்ளது என்றும் நஞ்சை நிலம் பொறுத்து என் குடும்பத்தில் பாகம் பிரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் தனித்தனி பட்டா ஏற்பட்டுவிட்டது என்றால் சரியல்ல.

வழக்கு சொத்துக்களை பொறுத்து பாகப்பரிவினை ஏற்படாத காரணத்தால் தான் இந்த வாதி அவருக்கு உரிய பாகத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளுக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் எதிலும் என் தகப்பனாருக்கு தனித்து பாத்தியம் கிடையாது என்றால் சரியல்ல. என் தகப்பனாருடன் பிறந்த ஆறுபேருக்கும் சொத்தில் பங்கு உண்டு என்றால் சரியல்ல.

வாதி கந்தசாமியின் வாரிசு என்ற முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**–Sd–**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**–Sd–**
**District Munsif,**
**Manamadurai.**